115

# தாயாகவும் தந்தையாகவும் ஆன பின்னர், அந்த அளப்பரிய மகிழ்ச்சியைத் தக்கவைப்பதற்கு.........



## தாயிலும் சேயிலும் ஏற்படும் பாதகமான நிலைமைகளை இனங்கண்டு சிகிச்சை பெறுவது அவசியம்


**Published by:**
Health Education Materials Production Unit,
Department of Community Medicine,
Faculty of Medicine,
University of Jaffna.

**Production Assistance by:**
31st Batch, Group C
Q.Vinushiya, P.Thusyanthy, V.Koculen, K.Sujanthan, S.Sasikanth

**Sponsored by:** mercy Malaysia

**Implement by:** CHA

## குழந்தைப் பேற்றினை அடுத்து தாயில் அவதானிக்க வேண்டியவை.........

- உயர் குருதியமுக்கம் (இரத்த அழுத்தம் கூடின்)
  - கடுமையான தலைவலி
  - தலைச்சுற்று, மயக்கநிலை
  - நெஞ்சில் அல்லது மேல் வயிற்றில் எரிவுத்தன்மை, நோ, இருக்குதல் போன்ற உணர்வு ஏற்படல்.
  - கண்களில் வெளிச்சங்கள் மின்னுதல்
  - பார்வை மங்குதல்
  - மூச்செடுப்பதில் சிரமம்

- குருதிப்போக்கு அதிகரித்தல் அல்லது இரத்தக்கட்டிகள் வெளியேறுதல்.

- கணைக்கால் தசைகளில் நோ நாளுக்கு நாள் அதிகரித்தாலும், நடக்கும் போது நோ கூடுதலும்.

- ஏற்கனவே இருதய நோய் உள்ள தாய்மார்களில் மூச்செடுப்பதில் சிரமம்.

**இந்த குணங்குறிகளில் ஏதாவது ஒன்றேனும் காணப்படினும்**

**உடனடியாக தாயை வைத்தியசாலையில் அனுமதிக்கவும்.**

**ஏதாவது காரணத்தால் தாமதம் ஏற்படின் அது உயிராபத்தை ஏற்படுத்தும்!**



**பின்வரும் குணம் குறிகளில் ஏதாவது ஒன்றினைத் தாய் கொண்டிருப்பினும், வைத்தியரை அணுகி பரிசோதனை செய்து கொள்ளவும்**

✓ யோனிச் சுரப்பு
- துர்நாற்றம்
- சுரப்பின் அளவு அதிகரித்தல்
- சீழை கொண்டிருத்தல்

✓ யோனி புண்
- தொய்வான தையல்
- சீழ்த்தன்மையான சுரப்பு
- சீழ்க்கட்டி உண்டதால்
- கடுமையான நோ

✓ குழந்தை பிறந்து முதல் 6 கிழமைகளுக்குள் காய்ச்சல்

✓ மூச்செடுப்பதில் சிரமம்
- படிபடியாக மூச்செடுப்பதில் சிரமம்
- மூச்செடுக்கும் தடவைகள் அதிகரித்தல்

✓ நெஞ்சு நோ

✓ மன அழுத்தம்
- நித்திரைக் குழப்பம்
- குழந்தையிடம் அக்கறையின்மை அல்லதுகுழந்தையை பற்றி அநாவசியமாக கவலைப்படல்
- சிறு விடயங்களுக்கு உணர்ச்சி வசப்படல்
- வாழ்வில் விரக்தி ஏற்படல்



**பிரசவத்தின் பின் மருத்துவ மாதுவால் உங்கள் வீட்டிற்கு வருகை தந்து சேவையாற்றும் நாட்களாவன...**

1. உங்கள் பிரசவம் வீட்டில் நடைபெற்று இருப்பின்
   - 1ம் தரிசிப்பு - பிரசவத்தின் பின் 3 நாட்களுக்கிடையில்
   - 2,3ம் தரிசிப்பு - 3 தொடக்கம் 10 நாட்களுக்கிடையில்
   - 4ம் தரிசிப்பு - 11 தொடக்கம் 28 நாட்களுக்கிடையில்
   - 5ம் தரிசிப்பு - 38 தொடக்கம் 46 நாட்களுக்கிடையில்

2. உங்கள் பிரசவம் வைத்தியசாலையில் நடைபெற்று இருப்பின்
   - 1ம் தரிசிப்பு - பிரசவத்தின் பின் 3 நாட்களுக்கிடையில்
   - 2ம் தரிசிப்பு - 3 தொடக்கம் 10 நாட்களுக்கிடையில்
   - 3ம் தரிசிப்பு - 11 தொடக்கம் 28 நாட்களுக்கிடையில்
   - 4ம் தரிசிப்பு - 38 தொடக்கம் 46 நாட்களுக்கிடையில்

**ஒவ்வொரு தரிசிப்பின் போதும் வழங்கப்படும் சேவைகளாவன.**

1.தாயிற்கு
- தாய்பால் ஊட்டுவதற்கான பயிற்சிகள் வழங்கல்
- உடல் பரிசோதனை செய்யதல்
- பிரசவத்தின் பின் ஏற்படும் மனஅழுத்தம் பற்றி தாயிற்கும் தந்தைக்கும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தல்
- தாய்மை அடைகையில் கிடைக்கும் சலுகைகளான தாய்ப்பால் ஊட்டலுக்கான விடுமுறைவசதிகள் தொடர்பாக தாய்மார்களுக்கு அறிவூட்டுதல்
- குடும்ப திட்டம் பற்றிய விளக்கம் அளித்தல்

2.சிசுவிற்கு

- சிசுவின் நடத்தையில் ஏதாவது மாற்றம் இருக்கின்றதா என பரீட்சிக்கப்பட்டு அவ்வாறு இருப்பின் வைத்திய ஆலோசனைக்கு உட்படுத்தப்படுத்தல்
- சிசுவின் தொப்புள்கொடி சீழைக் கொண்டிருக்கிறதா என அவதானித்தல்.
- முதல் 4-6 மாதம் வரை தாய்ப்பால் ஊட்டப்படுகின்றதா என்பது உறுதிப்படுத்தல்
- தாயினதும் சிசுவினதும் பாதுகாப்பு பற்றி ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆலோசனை வழங்கல்
- குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தல்

## உங்களுடைய புதிதாக பிறந்த குழந்தைக்கு

- காய்ச்சல் அல்லது கைகால்கள் குளிர்வடைதல்
- இடைக்கிடை மூச்செடுப்பதை நிறுத்துதல்
- முனங்குதல் விரைவாக மூச்செடுத்தல்
- நன்றாக பால் அருந்திய பின்னர் அடுத்தடுத்து இரு தடவைகளில் பால் அருந்த மறுத்தல்
- பால் குடிக்கும் போது குழந்தை நீல நிறமாதல்
- பச்சை கறுப்பு மஞ்சள் நிற வாந்தி எடுத்தல்
- தொப்புளை சுற்றி தோல் சிவந்து இருத்தல்
- படிபடியாகத் தோலின் நிறம் மஞ்சள் நிறமடைதல்!
- அழுகை ஒலி நலிவடைந்து இருத்தல்
- 10 நாட்களுக்கு மேலாக மஞ்சள் நிறம் தொடர்ந்து இருத்தல்
- வயிற்றோட்டம்
- கை காலில் வீக்கம் ஏற்பட்டிருப்பின்
- கை கால்களில் சோர்வு

இந்த குணங்குறிகளில் ஏதாவது ஒன்றேனும் காணப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறவும்.



## பிரசவத்திற்கு பின்னரான சேவைகள் நடைபெறும் இடங்கள்....

### நல்லூர் சுகாதார அதிகாரி பிரிவில்

| இடம் | நேரம் | கிழமை |
|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை கோண்டாவில் | 8.00- 12.00 | 1வது செவ்வாய் |
| ஆரம்ப மருத்துவ பராமரிப்புப்பிரிவு கொக்குவில் | 8.00- 12.00 | 4வது புதன் |
| திருநெல்வேலி (VC) | 8.00- 12.00 | 4வது வியாழன் |





**அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அழையுங்கள் 110**